Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 714/2023 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW7 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | ராஜேஷ்வரி, காவல் ஆய்வாளர் |
| Father's Name | – | க/பெ. முருகேஷ்வரன் |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 03rd December 2025.

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. Legal aid counsel present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது ஊட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது, 19.08.2023 ம் தேதி காலை 08.30 மணிக்கு பொள்ளாச்சி மேற்கு காவல்நிலையக் குற்ற எண்.356/2023, சட்டப்பிரிவுகள் 457, 392 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து, புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே காலை 09.15 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் தியாகராஜன் மற்றும் நந்தகோபால் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.13** மற்றும் **அ.சா.ஆ.14** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் வாதியிடம் மிரட்டி பறித்த 6 பவுன் தங்க செயினுடன் வாதி மற்றும் அருகில் இருந்தவர்கள் பிடித்து காவல்நிலையத்தில் ஆஜர் செய்தவர்களை விசாரித்தபோது, வாதி மகாலட்சுமி கழுத்தில் அணிந்திருந்த சுமார் 6 பவுன் தங்க செயினை அருவாள் கத்தியை காட்டி பறித்த குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை சம்பவயிடத்தில் வைத்து கைதுக்கான காரணம் கூறி காலை 11.20 மணிக்கு கைது செய்தேன்.

பின்னர் எதிரி ரமேஷ் என்கிற அருண்முத்து எவ்வித அச்சுறுத்தலோ துன்புறுத்தலோ இன்றி தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் ஜெயக்குமார் மற்றும் நந்தகோபால் ஆகியோர்கள் முன்னிலையில் 11.25 மணிக்கு பதிவு செய்தேன்.

பின்னர் எதிரிகள் சம்பவத்தின்போது வாதியை அவர் கழுத்தில் இருந்த செயினை பறிக்க மிரட்ட பயன்படுத்திய அருவாள் கத்தி ஒன்றை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக மதியம் 12.30 மணிக்கு கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.15** ஆகும். பின்னர் எதிரி ஹரிஸ் என்கிற ஹரிதாஸ் என்பவர் மதியம் 12.30 மணிக்கு எவ்வித அச்சுறுத்தலோ துன்புறுத்தலோ இன்றி தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள எனது கையெழுத்து **அ.சா.ஆ.16, 17** ஆகும்.

பின்னர் எதிரிகள் இருவரும் கொள்ளையடிக்க செல்ல பயன்படுத்திய TN 58 BJ 9751 Bajaj CT 110 X என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தை பொள்ளாச்சி மார்க்கெட் ரோடு சின்னபள்ளிவாசல் அருகே 2ம் எதிரி அடையாளம் காண்பித்ததை மதியம் 13.35 மணிக்கு மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலமாக கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.18** ஆகும். பின்னர் பட்டியல்

சாட்சிகள் 7 முதல் 10 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன்.

பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 14.15 மணிக்கு நிலையம் வந்து எதிரிகளுக்கு திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் தங்கதுரை அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் வாதி எதிரிகளுடன் களவுபோன 6 பவுன் தங்க செயினை நிலையத்தில் ஆஜர்படுத்தியதை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 **அ.சா.ஆ.19** ஆகும். பின்னர் சம்பவயிடத்தில் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.20** மற்றும் **அ.சா.ஆ.21** ஆகும்.

தற்போது என்முன் காட்டப்படும புகைப்படத்தில் உள்ள வாகனம்தான் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகும். கைப்பற்றப்பட்ட பொருள்களை சிடியில் பதிவு செய்து கனம் நீதிமன்றத்திற்கு 65(B)(4) IEA ன் படி அனுப்பி வைத்தேன். மேற்படி சிடி மற்றும் பிரிவு 65(B)(4) IEA சான்றிதழ் **அ.சா.ஆ.22** மற்றும் **அ.சா.ஆ.23** ஆகும். பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகளுக்கெதிராக மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகஜர் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகளின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், எதிரிகளுக்கும் கைப்பற்றப்பட்ட பொருளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லையென்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/- Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi